**சிசி 146/2018 அசா.2 செல்வராஜ் க.பெ ஆவுடை தேதி 03.03.2023**

(1 வது எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் ஆகியுள்ளார். 2 முதல் 5 வரையிலான எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. 2 முதல் 5 வரையிலான எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 317 ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டது)

(எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 311 ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டுள்ளார்)

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. அ.சா.1 எனது மகள். பட்டியல் சாட்சிகள் தசரதன், சுப்ரமணியன், சிவநாதன் ஆகியோர் எனது உறவினர்கள் என்றால் சரிதான். ரவிகுமார் என்பவர் தான் 1 வது எதிரிக்கும், எனது மகளுக்கும் திருமண ஏற்பாடு செய்தார். 1 வது எதிரி எனது மகளுக்கு குழந்தை இல்லை என்பதால் அவரை துன்புறுத்தினார் என்ற விவரத்தை போலீசார் விசாரணையின் போது சொல்லி உள்ளேன். 1 வது எதிரியும், எனது மகளும் திருமணத்திற்கு பின்னர் எத்தனை ஆண்டுகள் சென்னையில் வசித்து வந்தார்கள் என்றால் 2012 மேமாதம் வரை சென்னையில் வசித்தார்கள். சென்னையில் எனது மகளும், 1 வது எதிரியும் வசித்தபோது, நான் அடிக்கடி சென்று அவர்களை பார்த்து வருவேன் என்றால் சரியல்ல, எப்போதாவது சென்று வருவேன், காலையில் சென்றால் மாலையில் திரும்பி விடுவேன். 1 வது எதிரி எனது மகளுக்கு எதிராக சென்னையில் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்தபோது, என் மகள் என்னுடன் வசித்து வந்தாரா என்றால் சென்னையில் 1 வது எதிரியுடன் தான் வசித்து வந்தார். 2010 ம் ஆண்டில் எனது மகளை நான் சென்னைக்கு சென்று அழைத்து வந்தேன் என்றாலும், அதன் பின்னர் பலமுறை எதிரி தரப்பில் சமாதான பேச்சு நடத்தினார்கள் என்றாலும் சரியல்ல.

2. நான் என் முதல் விசாரணையில் சொல்லி உள்ளவாறு 1 வது எதிரி என் மகளிடம் பணம் கேட்டு தொந்தரவு எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல, பணம் கேட்டு தொந்தரவு செய்தார். எனது மகள் புகார் அளித்து, எத்தனை நாட்கள் கழித்து என்னை விசாரணை செய்தார்கள் என்றால் எனது மகள் புகார் அளித்ததும் ஆலங்குடி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வைத்து, எனது மகளுடன் 1 வது எதிரியால் வாழ முடியாது என்றும், 1 வது எதிரி கொடுக்கும் பணத்தினை வாங்கி கொண்டு, பிரிந்து செல்லுமாறும் பஞ்சாயத்து பேசினார்கள், அதன் பின்னர் 10 நாட்கள் கழித்தே நாங்கள் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் சென்று முறையிட்டதால் விசாரணை செய்தார்கள். அதன் பின்னர் போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். 1 வது எதிரியும், எனது மகளும் சென்னையில் தனியாக தான் வசித்தார்கள். அந்த சமயத்தில் 2 வது எதிரி அவரது ஊரில் வசித்து வந்தார் என்றால் சரிதான். 1 வது எதிரியும், எனது மகளும் சென்னையில் வசித்த போது, 1 வது எதிரி தனது தாயாரை தன்னுடன் வைத்து கொள்ள வேண்டும் என்று கேட்டதற்கு எனது மகள்

உடன்படாமல், கோவித்து கொண்டு, எனது ஆலோசனையின் பேரில் என் வீட்டிற்கு வந்துவிட்டார் என்றால் சரியல்ல. நான் 2010ம் ஆண்டு சென்னைக்கு சென்று 1வது எதிரி வீட்டில் இல்லாத சமயத்தில் எனது மகளை அழைத்து வந்தேன் என்றால் சரியல்ல.

3. பலமுறை பஞ்சாயத்து பேசியும், எனது மகள் உடன்பட மறுத்ததால் 1வது எதிரி எனது மகளுக்கு எதிரா விவாகரத்து வழக்கு தாக்கல் செய்தார் என்றும், அதனாலேயே எதிரிகளை பழி வாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் நடக்காத சம்பவத்திற்கு அ.சா.1 பொய்யாக புகார் அளித்தார் என்றால் சரியல்ல. எனது மகள் அளித்த பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. திருமணம் ஆனதிலிருந்து இதுநாள் வரை எனது மகளின் பெயர் எங்களது குடும்ப அட்டையில் தான் உள்ளது என்றால் சரிதான், 1வது எதிரி எனது மகளின் பெயரை குடும்ப அட்டையிலிருந்து நீக்குவதற்கு எந்தவித முயற்சியும் எடுக்கவில்லை. 1வது எதிரி இரண்டாவது திருமணம் செய்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. 1வது எதிரி என்னிடமோ, எனது மகளிடமோ பணம் எதுவும் கேட்டு தொந்தரவு செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது மகள் திருமணமாகி சில காலங்கள் மட்டுமே 1வது எதிரியுடன் வசித்தார் என்றும், அதன் பின்னர் தொடர்ச்சியாக எனது வீட்டில் வசித்ததால் தான் எனது மகள் பெயர் குடும்ப அட்டையில் இருந்து நீக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கும், எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**